இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 50 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 12 – செவ்வாய்க்கிழமை 29 செப்டம்பர் 2026 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 50 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 12 - Tuesday 29 September 2026 - Dak 10 Pages ₹ 5.00

ஜெம் வீரமணி வழக்கு; நீதிமன்ற உத்தரவை மீறி ரகசிய விசாரணைத் தகவல்களை பொதுவெளியில் பரப்புவதா?

முதலமைச்சர் விஜய்க்கு சம்மன் அனுப்பி விசாரிப்பீர்!

சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, செப். 29 -

ஜெம் வீரமணி தொடர்பான போக்சோ வழக்கில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள முதலமைச்சர் விஜய், அமைச்சர்கள் ஆதவ் அர்ஜூனா, சி.டி.ஆர். நிர்மல்குமார் ஆகிய மூவரையும் "சம்மன்" செய்து விசாரணைக்கு அழைத்து, அவர்களிடம் உள்ள ஆதாரங்களைப் பெற வேண்டும் என வலியுறுத்தி, சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் கழகப் பொருளாளரும் மக்களவைக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் புகார் மனு அளித்துள்ளார்.

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

கடந்த செப்டம்பர் 25ஆம் தேதி முதலமைச்சர் விஜய், ஜெம் வீரமணியைத் திராவிட முன்னேற்றக் கழகம் பாதுகாத்ததாகப் பொதுவெளியில் குற்றஞ் சாட்டினார். அதே நாளில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனா, ஜெம் வீரமணியைக் கழகம் பாதுகாத்ததோடு, அவர் மீதான வழக்கையும் தவறாக முடித்து வைத்ததாகக் குற்றம் சாட்டினார்.

அவதூறு பரப்ப முயற்சி!

இதனைத் தொடர்ந்து, செப்டம்பர் 26ஆம் தேதி சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், ஜெம் வீரமணியைப் பாதுகாப்பதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் அவரிடமிருந்து 500 கோடி ரூபாய் பெற்றதாகக் குற்றஞ் சாட்டியுள்ளார்.



பொதுவெளியில் இவர்கள் மூவரும் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மூன்று விதமாகக் கருத வாய்ப்பிருக்கிறது. முதலில் அவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை. எங்கள் கழகத்தின் மீதும் மற்றும் கழகத் தலைவர்கள் மீதும் அவதூறு பரப்ப முன் வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக இந்த மூவரிடமும் இந்தக் குற்றம் தொடர்பான மிகமுக்கியத் தகவல்கள் உள்ளன. ஆனால் போக்சோ சட்டப்படி அவற்றை விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை. மூன்றாவதாக புலனாய்வு அதிகாரியின் "கேஸ் டைரி"யில் உள்ள விசாரணைத் தகவல்கள் அதிகாரபூர்வமற்ற முறையில் கிடைக்கிறது; அவற்றைப் பொது வெளியில் பரப்புகிறார்கள்.

மாநிலத்தின் முதலமைச்சரும் இரு அமைச்சர்களும் முன்வைத்துள்ள இக் குற்றச்சாட்டுகள், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணையுடன் நேரடியாகத் தொடர்புடையவை. எனவே, இக் குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படையான ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் தகவல்களை அவர்களிடமிருந்து உடனடியாகப் பெறுவது அவசியமாகும்.

விசாரணை ரகசியங்கள் அழிப்படுகின்றனவா?

அவர்களிடம் ஆதாரங்கள் உள்ளனவா? இருந்தால், அவற்றை இதுவரை விசாரணை அதிகாரிகளிடம் ஒப்படைக்காதது ஏன்? விசாரணை தொடர்பான ரகசிய ஆவணங்கள் இவர்களுக்கு அனுமதியின்றிக் கிடைத்துள்ளனவா? அவற்றிலுள்ள தகவல்கள் பொதுவெளியில் வெளியிடப்பட்டுள்ளனவா? ஆகிய கேள்விகளுக்கும் விடை காண வேண்டும்.

விசாரணை அதிகாரியிடம் கொடுக்காதது ஏன்?

> **"பொதுவெளியில் இவர்கள் மூவரும் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை மூன்று விதமாகக் கருத வாய்ப்பிருக்கிறது. முதலில் அவர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் பொய்யானவை, எங்கள் கழகத்தின் மீதும் மற்றும் கழகத் தலைவர்கள் மீதும் அவதூறு பரப்ப முன் வைக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக இந்த மூவரிடமும் இந்தக் குற்றம் தொடர்பான மிகமுக்கியத் தகவல்கள் உள்ளன. ஆனால் போக்சோ சட்டப்படி அவற்றை விசாரணை அதிகாரியிடம் கொடுக்கவில்லை. மூன்றாவதாக புலனாய்வு அதிகாரியின் "கேஸ் டைரி"யில் உள்ள விசாரணைத் தகவல்கள் அதிகாரபூர்வமற்ற முறையில் கிடைக்கிறது; அவற்றைப் பொது வெளியில் பரப்புகிறார்கள்."**

சிறார்கள் பாதிக்கப்பட்டுள்ள இவ் வழக்கில், ஆதாரங்கள் அழிக்கப்படுவதற்கோ மறைக்கப்படுவதற்கோ இட மளிக்காமல் அவற்றை உடனடியாகச் சேகரிக்க வேண்டும். அதுதான் விசாரணை மீது பொதுமக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

குற்றச்சாட்டுகள் வேண்டுமென்றே பொய்யாக முன்வைக்கப்பட்டிருந்தாலோ, சட்டப்படி தெரிவிக்க வேண்டிய தகவல்கள் மறைக்கப்பட்டிருந்தாலோ, விசாரணை ரகசியங்கள் அனுமதியின்றி வெளியிடப்பட்டிருந்தாலோ, சம்பந்தப்பட்டவர்கள் மீது போக்சோ சட்டம் மற்றும் பாரதிய நியாய சன்ஹிதாவின் பொருந்தக்கூடிய பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக்குற்றத்தில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் தப்பிக்கக் கூடாது என்பதுதான் தி.மு.க.வின் உறுதியான நிலைப்பாடு. அதே வேளையில், ஆதார மற்ற குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள் எத்தகைய உயர்பதவியில் இருந்தாலும், அவர்களையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

ஆகவே, முதலமைச்சர் மற்றும் இரு அமைச்சர்கள் உள்ளிட்ட மூவரையும் "சம்மன்" செய்து விசாரிக்க வேண்டும் என்று அம்மனுவில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

செயலற்ற விஜய் அரசில் தொடர் மின்வெட்டு!

தமிழகம் முழுவதும் தொழில்கள் முடக்கம்!

மின்துறையில் அடுத்தடுத்து சிக்கல்!


சென்னை, செப். 29 –

தமிழகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் தொடரும் மின்தடை காரணமாக வீடுகள் மட்டுமின்றி சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களும் பாதிக்கப்பட்டு வருகின்றன. அடிக்கடி ஏற்படும் மின்தடையால் உற்பத்தி பாதிப்பு, மூலப்பொருள் வீணாகுதல், இயந்திரங்களில் பழுது, தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நேரத்திலும் ஊதியம் வழங்க வேண்டிய நிலை என தொழில் நிறுவனங்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருவதாக தெரிவிக்கின்றன.

கோவை மாவட்டத்தில் மட்டும் செப்டம்பர் மாதத்தில் திடீர் மின்தடையால் 3 நாளில் சுமார் ரூ.30 கோடி வரை உற்பத்தி மற்றும் பொருள் சேதம் ஏற்பட்டதாக தொழில் துறையினர் தெரிவித்துள்ளனர். ஒரு நாளில் 7 முதல் 10 முறை வரை மின்தடை ஏற்பட்டதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். திருச்சி, மதுரை, திருவள்ளூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் தொழில் நிறுவனங்கள் மின்தடை மற்றும் குறைந்த மின்னழுத்தம் குறித்து புகார் தெரிவித்துள்ளன.

தமிழகத்தின் மின் தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், தற்போதைய உச்ச தேவை சுமார் 19 ஆயிரம் மெகாவாட்டாக உள்ளதாக மின் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். வரும் காலத்தில் தேவை மேலும் 4 ஆயிரம் மெகாவாட் அதிகரித்து 23 ஆயிரம் மெகாவாட்டை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. காற்றாலை மின் உற்பத்தி குறைந்ததால் கூடுதலாக சுமார் 3,000 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக அதிகரித்த தேவையை சமாளிக்க கூடுதலாக 2,000 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய நடவடிக்கை



எடுக்கப்பட்டதாகவும் மின்வாரியம் தெரிவித்திருந்தது. இதற்கிடையே மின்துறை வெள்ளை அறிக்கையின்படி, மின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் பகிர்மான நிறுவனங்களில் மொத்தம் 65,921 பணியிடங்கள் காலியாக உள்ளன. இதில் மின் பகிர்மானக் கழகத்தில் மட்டும் 53,575 பணியிடங்கள் காலியாக உள்ளன. 2026-27ம் ஆண்டில் 20,449 பணியிடங்களை நிரப்ப முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் கள உதவியாளர் உள்ளிட்ட பணியிடங்களும் அடங்கும். களப்பணியாளர்கள் பற்றாக்குறை நீடிக்கும் நிலையில், 18 ஆயிரம் ஒப்பந்த தொழிலாளர்களை நேரடியாக ஈடுபடுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மின்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேநேரம், காலிப் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்ப வேண்டும் என்று தொழிற் சங்கங்கள் வலியுறுத்தி வருகின்றன.

எதிர்க்கட்சியினர் குற்றச்சாட்டு!

திறந்தவெளி சந்தை மூலம் மின்சாரம் பெறும் உயர் அழுத்த தொழில் நிறுவனங்களுக்கு அக்.1 முதல் மார்ச் 31 வரை யூனிட்டுக்கு 63 பைசா கூடுதல் கட்டணம் விதிக்க மின் பகிர்மானக் கழகம் ஒழுங்குமுறை ஆணையத்திடம் முன்மொழிந்துள்ளது. திறந்தவெளி மின் பயன்பாட்டால் பயன்படுத்தப்படாமல் தேங்கிய மின் திறனுக்கான செலவு உள்ளிட்டவற்றால் ரூ.180.91 கோடி நிகர செலவு ஏற்பட்டுள்ளதாக மின்வாரியம் தெரிவித்துள்ளது. இதனால் தொழில் நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்குவதுடன், மின் கட்டணச் சுமையையும் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இந்நிலையில், மின்வெட்டு பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண்பதற்கு பதிலாக அரசு விளம்பரம் மற்றும் சமூக வலைதள நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது என எதிர்க்கட்சியினர் விமர்சித்து வருகின்றனர். குறிப்பாக மின் வாரிய தலைமை அலுவலகத்தில் முதல்வர் ஆய்வு செய்ததை தொடர்ந்து, ரீல்ஸ் எடுப்பதற்காகத்தான் ஆய்வு நடத்தப்பட்டதா என அரசியல் கட்சியினர் விமர்சித்துள்ளனர்.

மின்வெட்டு காரணமாக தொழில் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க தடையில்லா மின்சாரம், காலிப்பணியிடங்களை நிரப்புதல், பழைய மின்மாற்றிகள் மற்றும் துணை மின் நிலையங்களை மேம்படுத்துதல், மின் கட்டணச் சுமையை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றில் அரசு தெளிவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே தொழில் நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மின்வெட்டு எப்போது முழுமையாக முடிவுக்கு வரும். தொழில்களின் உற்பத்தி இழப்புக்கு என்ன தீர்வு, காலிப்பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும், மின் கட்டணம் வரும் மாதங்களில் எவ்வாறு இருக்கும் என்பதற்கான தெளிவான பதிலை தமிழக அரசு அளிக்க வேண்டும் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.

